ரூ. 35 இலட்சத்தில் சுற்றுலா விடுதியும், ரூ. 22 இலட்சத்தில் கடற்கரைப் பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளன. 2003–2004 ஆம் ஆண்டு விவேகானந்தா சுற்றுலா சுற்றுச் சாலை அபிவிருத்தித் திட்டத்தில் இராமேஸ்வரம் மற்றும் இராமநாதபுரம் பகுதியில் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ. 168.24 இலட்சத்தில் ஒப்புதல் வழங்கி, முதல் தவணையாக ரூ. 54.47 இலட்சமும், இரண்டாவது தவணையாக ரூ. 84 இலட்சமும் அரசால் வழங்கப்பட்டிருக்கிறது. பணிகள் நடைபெற்று வருகின்றன. 2003–2004 ஆம் ஆண்டு, இராமேஸ்வரத்தில் சுற்றுச்சூழல் சுற்றுலா மற்றும் பறவைகள் கூடம் ஏற்படுத்தும் திட்டத்திற்கு ரூ. 43 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கி, முதல் தவணையாக ரூ. 34 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நடைமுறைகள் பின்பற்றப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்) என்ன, துரைமுருகன் என்ன?

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

சாலைப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்கக் கோருதல்

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, தங்களுடைய தீர்ப்பை நான் எதிர்ப்பார்க்கிறேன். இது ஒன்றும் தனிப்பட்ட வகையில் அல்ல. இந்த மன்றத்திற்கு, வருங்காலம் இந்த மன்றம் செம்மையாக நடைபெறுவதற்கு உதவுகிற வகையில், மன்றத்தில் ஆளும் கட்சி, எதிர்க் கட்சி இரண்டும் உண்டு. நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகிறபொழுது, பலதரப்பு மக்கள் பாதிக்கப்படுகிறபொழுது, அவற்றைச் சட்டமன்ற உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். இப்படி சட்டமன்றம் நடக்கிறபொழுது, அந்தப் பிரச்சினையை மன்றத்திலே கிளப்புவார்கள், ஆளும் கட்சி அதுகுறித்து நடவடிக்கை எடுக்கலாம் என்ற ஒரு ஆசையின் காரணமாக. அப்படி எதிர்க் கட்சிகளாக இருக்கிற எங்களிடத்தில், ஆளும் கட்சியைவிட அதிகமான குறை சொல்லுகிறவர்கள் வருவார்கள். அந்தப் பிரச்சினையை நாங்கள் ஒரு

2005 செப்டம்பர் 27] [திரு. துரைமுருகன்]

பகுதி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று இந்த மன்றத்திலே வைக்கிறபொழுது, இந்த அமைச்சர் பெருமக்கள், அதைக் கூர்ந்து பார்த்து, சரியாக இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம். இல்லாவிட்டால் விடலாம். ஆனால், அதை விட்டுவிட்டு, சொல்லுகிற உறுப்பினர்களுக்கு ஒரு motive கற்பிப்பது என்பது ஜனநாயக முறைக்கு சரியல்ல. இந்த மன்றத்திற்கும் மரபல்ல. அதைத்தான் நேற்றையதினம் — நான் ஒன்று சொல்லுகிறேன். உடனடியாக வந்துவிடாதீர்கள். சாலைப் பணியாளர் பிரச்சினையை நாங்கள் சொல்லுகிறபொழுது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை நேற்றே அதெல்லாம் முடிந்து விட்டது. நேற்றே அதெல்லாம் முடிந்து விட்டது.

திரு. துரைமுருகன்: முடிந்துவிட்டது என்பதல்ல. ஒரு அமைச்சர் ஒரு குற்றச்சாட்டு சொல்கிறார் உடனடியாக நாங்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை நேற்றே பேசி முடிவுபெற்றுவிட்டது. (குறுக்கீடு) துரைமுருகன், அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அவர் உங்களையோ அல்லது பொன்முடியையோ குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

திரு. துரைமுருகன்: அந்த நிலைமை உருவாகுமானால், உடனடியாக, நாங்கள் எதிர்க்கட்சிகள், எப்படிப் பணியாற்றுவது? எங்களுக்கு நீங்கள்தானே? ஆயிரம் இருந்தாலும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்டதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். உச்ச நீதிமன்றத்திலே் வழக்கு இருக்கிறது என்று பதில் சொல்லிவிட்டார்கள்.

திரு. துரைமுருகன்: அத்தோடு விட்டிருந்தால் நான் முதலமைச்சரைக் கேட்டுக் கொண்டிருப்பேன், "இந்தப் பிரச்சினை நீதிமன்றத்திலே இருக்கிறது என்று சொல்கிறீர்களே, முதல்வர் அவர்களே, அந்த நீதிமன்றத்திற்கு தாங்கள்தானே வழக்கைக் கொண்டு சென்றீர்கள்" என்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அதற்குள், அந்தப் பிரச்சினைக்குள் போகாதீர்கள். துரைமுருகன், உங்களுடைய கோரிக்கை என்னவென்று புரிகிறது.

திரு. துரைமுருகன்: ஆகவே, அந்த வழக்கை நீங்கள் வாபஸ் வாங்கிக்கொண்டு, எத்தனையோ பேருக்கு அளிக்கும்போது, இவர்களுக்கு வாழ்வு அளியுங்கள் என்று நான் முதலமைச்சரிடத்திலே

என் வேண்டுகோளை வைத்திருப்பேன். காரணம் வழக்கை வாபஸ் வாங்கினால் தரலாம் அவர்களுக்கு, முதலமைச்சர் நினைத்தால். நான் கேட்டிருப்பேன். ஒருகால் முதலமைச்சர்கூட மனமிரங்கி நேற்றே அறிவித்திருப்பார்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இல்லை. இப்போது என்ன பிரச்சினை?

திரு. துரைமுருகன்: முதலமைச்சர் அவர்கள் செய்கிற பணிகூட இல்லாமல் – பிரச்சினைகள் ஒருவருக்கொருவர் போட்டி என்று வரும்போது – எல்லாவற்றிலும் வரலாம், எல்லாவற்றிலும் அரசியல் வரலாம். ஆனால் சில விஷயங்களிலாவது ஆளும் கட்சி, எதிர்க் கட்சி நாங்கள் சொல்வதை அவர்கள் ஏற்கிற வகையிலே இருக்க வேண்டும். நீங்கள் இப்படிப்பட்டப் பிரச்சினைகளுக்கு எங்களுக்குப் பாதுகாப்பு அளிக்காவிட்டால் நாங்கள் எப்படிப் பிரச்சினைகளைச் சொல்வது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அதை நேற்றே நீங்கள் சொன்னீர்கள். அதற்குரிய விளக்கத்தை நான் நேற்றே சொல்லிவிட்டேன். நீங்கள் அதற்குப் பிறகு வெளிநடப்புச் செய்தீர்கள். மற்ற கட்சிகளும் வெளிநடப்புச் செய்தன. அதோடு பிரச்சினை முடிந்துவிட்டது. மறுபடியும் அதையே கிளப்புவது சரியல்ல. துரைமுருகன் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. துரைமுருகன்: வாபஸ் வாங்க வேண்டுமென்று நான் கேட்டிருப்பேன்.

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

வனத் துறைப் பணியாளர்களுக்கு சலுகைகள் – மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் (குறுக்கீடு) இல்லை. மணி இன்றைக்கு நீங்கள் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பேசும்போது சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுகின்ற வாய்ப்பு இருக்கிறது, பேசும்போது சொல்லுங்கள். (குறுக்கீடு) பேசுகின்ற வாய்ப்பு உங்களுக்கு இன்றைக்கு இருக்கிறது. நீங்கள் பேசுகிறபோது சொல்லுங்கள். (குறுக்கீடு) ஏதாவது பிரச்சினை என்றால் பேசுகிறபோது சொல்லுங்கள். (குறுக்கீடு) பேசுகிறபோது சொல்லுங்கள். (குறுக்கீடு)